# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (4.1.2012), 'தானே' புயலினால் கடுமையாக பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்டத்திற்கு நேரில் சென்று, அங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கி, ஆறுதல் கூறியதோடு மட்டுமல்லாமல், அங்கு குழுமியிருந்த மக்களிடையே பின்வருமாறு உரையாற்றினார்கள்.

"வணக்கத்திற்குரிய பெரியோர்களே, என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே, இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் ரத்தத்தின் ரத்தமான என் உயிரினும் மேலான எனதருமை உடன்பிறப்புகளே, அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'தானே' புயலால் இம்மாவட்டத்து மக்கள் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து உடனடியாக மக்களுக்குத் தேவையான நிவாரண உதவிகள் செய்வதற்கு அரசு இயந்திரத்தை முடுக்கி விட்டிருக்கிறோம். மக்களுக்குத் தேவையான குடிநீர், மின்சார வசதி, வீடுகள், சாலை வசதி அனைத்தையும் செய்து கொடுக்க 850 கோடி ரூபாய் அளவுக்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது. ஆகவே, மக்கள் பயிரிழந்திருந்தாலும் அல்லது தங்கள் படகுகளை இழந்திருந்தாலும், குடியிருந்த வீடுகளை இழந்திருந்தாலும், எதற்கும் கவலைப்பட வேண்டாம். உங்களுக்குத் தேவையான உதவிகளை செய்வதற்கும், உங்களுக்கு மறு வாழ்வு அளிப்பதற்கும் இந்த அரசு இருக்கிறது. நீங்கள் தேர்ந்தெடுத்த அரசு இருக்கிறது. இது உங்களுடைய அரசு. ஆகவே, உங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் இந்த அரசு செய்யும். நீங்கள் தைரியமாக இருங்கள் என்று உங்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொண்டு, உங்களுக்கெல்லாம் விரைவிலேயே மிக ஒளிமயமான எதிர்காலம் காத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு அனைவருக்கும் எனது புத்தாண்டு, பொங்கல் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டு, அண்ணா நாமம் வாழ்க, புரட்சித் தலைவர் நாமம் வாழ்க என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்."

கடலூரிலிருந்து புறப்படுவதற்கு முன்னர், பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் நிவாரண உதவிகள் வழங்கும் பணிகளை கடலூரிலேயே தங்கியிருந்து மேற்கொள்ளுமாறு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை
நாள் : 4.1.2012